Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No.C.C.NO.174/2019
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வித்யா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | வெங்கடேசன் | தொழில் | தனியார் வேலை |
| கிராமம் | ஊமையனூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 21 day of November 2022.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மஞ்சுளா எனது அம்மா ஆவார். கடந்த 2018 ம் ஆண்டு 11 ம் மாதம் தேதி சரியாக நினைவில்லை. மாலையில் சுமார் 4 மணியளவில் திருப்பத்துர் பேருந்து நிறுத்தில் தனது கிராமத்திற்கு செல்வதற்காக, கே.ஏ.எஸ் பேருந்தில் ஏறியுள்ளார். அப்பொழுது இரண்டு பெண்கள் எனது அம்மா வைத்திருந்த அவரது பர்ஸ்சை எடுத்துக்கொண்டு சென்றதால் கூச்சல் போட்டுள்ளார். பின்பு அங்கு உள்ள நபர்கள் அந்த இருவரையும் பிடித்துள்ளார்கள். எனது அம்மாவின் பர்சில் ரூ.1000/— பணமும், வீட்டு சாவியும் இருந்துள்ளது. இது தொடர்பாக எனது அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

கிருஷ்ணகிரி மாவட்டம், சாமல்பட்டி பக்கம் உள்ள கும்மனூரில் என்னை திருமணம் முடித்து கொடுத்தார்கள். சம்பவம் குறித்து எனக்கு தெரியாது, எனது தாயார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். போன் மூலமும் சொல்லினார், வீட்டில் வைத்தும் சொல்லினார். அ.சா.1 புத்தகாரம் என்ற ஊரில் உதவியாளராக வேலை பார்த்து வருகிறார். அ.சா.1 எனது தாயார் என்பதால் அவர் கேட்டுக்கொண்டற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால்

சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness